**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRIOCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 63 of 2020** |
| Deposition of witness | : | **PW1** |
| Name | : | **மாரிமுத்து** |
| Father Name | : | **குணசேகரன்** |
| Age | : | **33** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28.01.2026

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த தாவாவில் எனது இடம் எனக்கு வேண்டும் என்று கேட்டுள்ளேன். தாவா சொத்துக்கள் ஆதியில் சாந்தாமணி என்பவருக்கு பாத்திக்கப்பட்டது என்றால் சரிதான். சாந்தாமணி கிரையம் பெறுவதற்கு முன்பாகவே செக்பந்தி கண்டு தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். சாந்தாமணிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதியை தான் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் நான் கிரயம் பெற்ற தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் அதில் சர்வே எண் உள்ளது.

2. சாந்தாமணியின் செட்டில்மெண்ட் ஆவணம் படி அவருக்கு பார்த்திபட்ட இடத்தின் மொத்த விஸ்தீரணம் ஒரு ஏக்கர் தான் என்றால் சரிதான். அந்த ஒரு ஏக்கரில் தான் நெடுஞ்சாலைத்துறை கையகப்படுத்திய இடத்திற்கு மிஞ்சிய 67 செண்டை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்துக்கு கிழக்கு திசையில் ரங்கனின் பூமி உள்ளது என்றால் சரிதான். எனது பூமிக்கு ரீ சர்வே எண் 83/5A2 part என்றால் சரிதான்.

3. ஒன்றாம் பிரதிவாதிக்கு பூர்வீக வகையில் 1 ஏக்கர் 8 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கர் 8 சென்டில் 80 சென்டை கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரயம் கொடுத்த இடம் போக மீதம் உள்ள 28 சென்ட் இடமானது ஒன்றாம் பிரதிவாதி ரங்கனுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அந்த 28 சென்ட் இடத்திற்கு மேற்கு திசையில் தான் தாவா சொத்தான 67 சென்ட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 28 சென்டில் நெடுஞ்சாலைத்துறை ஒன்பது சென்டை கையகப்படுத்தியது போக மீதம் 19 சென்ட் இடம் தான் ஒன்றாம் பிரதிவாதி ரங்கனுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான்.

4. ஒன்றாம் பிரதிவாதி ரங்கனுக்கு பாத்தியப்பட்ட 19 சென்ட் இடத்தின் ரீ சர்வே எண் 83/6A2 part என்றால் சரிதான். மேற்படி 19 சென்ட் சம்பந்தமாக ஒன்றாம் பிரதிவாதி அசல் வழக்கு எண் 64/2020 என்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தற்போது அவிநாசி சார்பு நீதிமன்றத்தில் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரங்கன் தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு சொத்து சர்வே செய்யப்பட்டு அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிக்கையில் உள்ள விவரங்கள் சரிதானா என்றால் சரிதான்.

5. நீதிமன்ற ஆணையர் அந்த வழக்கில் தாக்கல் செய்த அறிக்கையில் எனது இடமான 67 சென்ட் சரியாக உள்ளதா அல்லது குறைவாக உள்ளதா என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் சரியாக உள்ளது என்று தான் சொல்லி உள்ளார். எனக்கும் ரங்கனுக்கும் இடையே சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு ஊத்துக்குளி காவல் நிலையத்தில் புகார்

கொடுக்கப்பட்டு எனது பெயரில் முதல் தகவல் அறிக்கை உள்ளதா என்றால் இல்லை.

6. மேற்படி தகராறு சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் ஒன்றாம் பிரதிவாதி மீது புகார் கொடுத்தேன் என்று எனது பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி நான் புகார் கொடுத்தேன் என்று காட்ட எனது புகார் மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சென்று ஒன்றாம் பிரதிவாதி இடத்தில் தகராறு செய்துவிட்டு நான் அவருக்கு முன்னர் சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்த காரணத்தினால் தான் எனது புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கிரயம் கொடுத்த சாந்தாமணியை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி கிருஷ்ணசாமியின் மனைவி ராமாத்தாள் பெயருக்கு தான் பட்டா உள்ளது என்றாலும் வருவாய்த்துறை ஆவணங்களில் இன்று வரையில் பெயர் மாற்றப்படவில்லை என்றால் சரிதான். ரி சர்வே எண் 83/6A1, 83/5A2 பொறுத்தவரையில் எனது பெயர் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். ரி சர்வே எண் 83/6A1, 83/5A2 பொறுத்தவரையில் மற்ற பங்குதாரர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் ஒன்றாம் பிரதிவாதி தாவா சொத்தில் எந்த ஒரு இடையூறும் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு இடையூறு ஏற்பட்டது என்று காட்ட எந்த ஒரு ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.28 17:15:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.